# ஜே.வி.பி. இயக்கத்தின் முத்த தலைவர் கைது


பக்கங்கள் நான்கு — விலை ரூபா:- 4-00

முரசொலி

முரசு 04 ஒலி 280 செவ்வாய் 20-11-1990 (கார்த்திகை 04) ஜ அவ்வல் 02


## அமைப்புக் குழுவின் செயலாளர் விஜேயவீராவின் வாரிசு

ஜே. வி. பி. இயக்கத்தின் உயர் மட்டத் தலைவர் ஒருவர், தென்மாகாணத்தில் வைத்து ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்டார். 41 வயதான தயா வன்னியாராட்சி என்ற இவர் றோகன விஜெயவீராவின் மறைவுக்குப் பின் இந்த இயக்கத்தின் தலைமைப் பொறுப்பை வகித்து வந்தார். 1971 இல் இருந்து ஜே. வி. பி. இயக்கத்தின் நடவடிக்கைகளில் முக்கிய பங்கு வகித்து வந்த. ஜே. வி. பி. இயக்கத்தில் உள்ள அதிகம் படித்தவர்களில் ஒருவராகவும் இவர் கருதப்படுகிறார். இவர் இந்த இயக்கத்தின் அமைப்புக் குழுவின் செயலாளராகவும் கடமையாற்றியுள்ளார். இவர் கைதானதைத் தொடர்ந்து பிரதேச தலைவர் ஒருவரும் கைதாகியுள்ளார்.

# தச்சன்காட்டில் மினி முகாம்கள்

# விடுதலைப் புலிகளால் தகர்ப்பு

## 6 இராணுவத்தினர் பலி; பல ஆயுதங்கள் மீட்பு

நேற்று அதிகாலை 1-40 மணியளவில் மாவிட்டபுரம் - கீரிமலை வீதியில் தச்சன்காடு என்னுமிடத்தில் நிலை கொண்டிருந்த இராணுவத்தினரின் மினி முகாம்கள் இரண்டு விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இத்தாக்குதல் சம்பவத்தில் 6 இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து முகாமின் ஒரு பகுதி தீப்பற்றி எரிந்தது. இதில் பல இராணுவத்தினர் காயப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது. இத்தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் 2-ம் லெப். மணிமேகன் என்பவர் வீரமரணமடைந்தார். இச்சம்பவத்தைத் தொடர்ந்து பலத்த ஷெல்,

ஹெலிகொப்டர் தாக்குதல்கள், பராவெளிச்சத்துடன் அதிகாலை 4 மணிவரை மேற்கொள்ளப்பட்டன. ஹெலிகொப்டர் மாவிட்டபுரம், கொல்லங்கலட்டி, கீரிமலை, இளவாலை, அம்பனை, விளான் பகுதிகளில் பலத்த தாக்குதலை மேற்கொண்டன. ஷெல்கள் கொல்லங்கலட்டி, மாவிட்டபுரம், சேந்தாங்குளம் பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன. இத்தாக்குதலில் சேந்தாங்குளம் வசந்தபுரத்தைச் சேர்ந்த திருநாவுக்கரசு (39) கையை இழந்தார்.

இத்தாக்குதல் சம்பவத்தின் போது கைப்பற்றப்பட்ட ஆயு

—04 ஆம் பக்கம் பார்க்க

### பொருட்சேகரிப்பில் தொண்டர்

## கிழக்கு சகோதரர்க்கு உதவுமாறு வேண்டுகோள்

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் நேற்று விடுத்த செய்தியின் பிரகாரம் மாவீரர் தினத்தில் பிரதேசப் பொறுப்பாளர்களால் நியமிக்கப்பட்ட தொண்டர்கள். பொது மக்கள் வீடுகளுக்குச் சென்று கிழக்கு மக்களுக்கான உதவிகளை பெற்றுக் கொள்வர்.

வீட்டுக்கு வரும் திகதி முன் கூட்டியே அறிவிக்கப்படும். வீட்டுக்கு வரும் தொண்டரி

—04 ஆம் பக்கம் பார்க்க

### பருத்தித்துறை, மந்திகை, கட்டுவன், சேந்தாங்குளம்

# நேற்று விமானத் தாக்குதல்

நேற்றுக் காலை சுமார் 8.30 மணியளவில் இங்கு வந்த பொம்மர் மந்திகை அரசினர் வைத்தியசாலைக்கு அருகிலுள்ள புலோலி மெதடிஸ்த மிசன் தமிழ்க்கலவன் பாடசாலை மீது நான்கு குண்டுகளை வீசியது.

இப்பாடசாலை மீது நடாத்தப்பட்ட குண்டுத்தாக்குதலினால், இங்குள்ள பல கட்டிடங்கள் முற்றாகச் சேதமடைந்தன.

இப்பாடசாலை மீது இலங்கைப்படை இத்துடன் மூன்றாவது தடவையாகத் தாக்குதலை நடத்தியுள்ளது.

மீண்டும் ஒன்றரை மணி நேரத்துக்குப்பின்னர் 10 30 மணியளவில் பருத்தித்துறை வந்த இருபொம்மர்கள் முதலாம் கடடையை அண்டிய பகுதிகளில் நான்கு குண்டுகளை வீசின.

இத்தாக்குதலின் போது பருத்தித்துறை முதலாம் கட்டையடியில் உள்ள, பருத்தித்துறை பலநோக்குக்கூட்

— 04 ஆம் பக்கம் பார்க்க

### மொறக்கொட்டாஞ்சேனை

## ராணுவம் மீது சினைப்பர் தாக்கு

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மொறக்கொட்டாஞ்சேனை இராணுவ முகாமில் இருந்து வந்தாறுமூலைக்குச் சென்று கொண்டிருந்த இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் சினைப்பர் தாக்குதல் மேற் கொண்டனர்.

கடந்த 11-ந் திகதி பிற்பகல் 2 மணியளவில் இடம் பெற்ற இத்தாக்குதலில் 2 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். (71)

### டிசம்பர் 1 ஆம் திகதியில் இருந்து

# யாழ் மாவட்டத்தில் சகலருக்கும் விசேட இலவச உணவு விநியோகம்

யாழ் மாவட்டத்திலுள்ள சகல மக்களுக்குமான வசேட இலவச உலர் உணவு விநியோகம் டிசம்பர் மாதம் 1 ஆம் திகதியில் இருந்து வழங்கப்படும்.

நேற்று யாழ் செயலகத்தில் இடம்பெற்ற உயர்மட்ட அதிகாரிகள் கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டது.

தொடர்ந்து நான்கு வாரங்களுக்கு வழங்கப்படவிருக்கும் இவ் விநியோகம் ஏற்கெனவே நடைமுறையிலுள்ள உணவு விநியோக அட்டவணைப்படி செயற்படுத்தப்படும்.

இதேவேளை தற்போது நடைமுறையிலுள்ள 4 ஆம் கட்ட விநியோகம், இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் வழங்கி முடிக்கப்படவேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுளளது. (66)

## சத்திரசிகிச்சை நிபுணர்கள் இல்லை; நோயாளர் ஆபத்து நிலையில்

யாழ் போதனா வைத்தியசாலையில் குறிப்பிட்ட சில துறைகளுக்குச்சத்திரசிகிச்சை நிபுணர்கள் பற்றாக்குறை நிலவுகின்றதாகவும், இதனால் மூளை, நரம்பு போன்ற வற்றில் நோயாளிகளாக வருபவர்கள் இவ்வாறான, சிகிச்சைக்கு கொழும்பு செல்ல வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இவ்வாறான நோயாளிகளுக்கு இங்கு சத்திரசிகிச்சை மேற்கொள்ள முடியாது இருப்பதனால் பல

—04 ஆம் பக்கம் பார்க்க

## நேற்று முழுவதும் ஷெல் தாக்குதல் இருவர் காயம், வீடுகள் சேதம்

பலாலியில் இருந்து நேற்று அதிகாலை முதல் நாள் முழுவதும் ஷெல் தாக்குதல்கள் நடாத்தப்பட்டன.

துர்க்காபுரம்தேநீர்க்கடைக்கு முன்பாக ஒரு மரத்துடன் ஒரு ஷெல் மோதி வெடித்தது.

மல்லாகம் விசாலாட்சி பாடசாலை பின்புறத்திலும் சரவணபவான் என்பவரின் வீட்டிலும் விழுந்து வெடித்தன. இவரின் வீடும் சேதமானது. மகள் சரோஜா(18) சிறுகாயம் அடைந்தார்.

ஆறுமுகசாமி என்பவரின் வீடும் சேதமானது அ வசந்தகுமார் (15, காயம் ஏற்பட்டு யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். (ப33)

### அமைச்சர் நாஞ்சில் மனோகரன் உறுதி

## ‘இந்திய மத்திய அரசாங்கம் தமிழக அரசைக் கவிழ்க்க மாட்டாது’

தமிழக அரசைக் கவிழ்க்கும் எண்ணம் மத்திய அரசிற்கு இல்லை எனத் தமிழக அமைச்சர் நாஞ்சில் மனோகரன் தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் பிரதமர் சந்திரசேகர், துணைப்பிரதமர் தேவிலால் ஆகியோரைச் சந்தித்துப்பேச்சு நடாத்திய பின்னர் கருத்து வெளியிட்ட அமைச்சர் மனோகரன், தமிழ் நாட்டின் சட்டம் ஒழுங்கு மற்றைய மாநிலங்களைவிட திருப்திகரமாகவே அமைந்திருக்கிறது எனத்தாம் அவர்களுக்குச்சுட்டிக்காட்டியதாகவும் தெரிவித்தார்.

ஜனாதிபதி வெங்கட்ராமனையும், அமைச்சர் நாஞ்சில் மனோகரன் சந்தித்து தமிழ்நாடு நிலை குறித்து விளக்கினார்.

இதேவேளை இன்று புதுடில்லிக்குத் தமிழக முதலமைச்சர் கருணாநிதி பயணமாகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### க.பொ.த. (சா.த.)

## தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் முடிவுகள் வெளியாகின

1989 க. பொ. த, (சா.த.) பரீட்சைக்குத்தோற்றியதனிப்பட்ட பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் நேற்றைய தினம் யாழ் கல்வித்திணைக்களத்துக்கு வந்து சேர்ந்தன.

இவற்றை கோட்டரீதியாக தரம் பிரித்து அனுப்பும் முயற்சியில் கல்வித்திணைக்களத்தைச் சேர்ந்த பாடசாலை நிர்வாகக்கிளை ஊழியர்கள் ஈடுபட்டிருந்தனர்.

இவைகள் கோட்டங்களுக்கு கொடுக்கப்பட்டு, அவ்வக் கோட்டங்கள் மூலம் தனிப்

—04ஆம் பக்கம் பார்க்க

## சிறிய செய்திகள்

### தென்மராட்சி கலைத்தெரிவுபோட்டி முடிவுகள்

மாவீரர் தினத்தையொட்டித் தென்மராட்சிக் கோட்டக் கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையேயான கலைத் தெரிவுப் போட்டிகள் அண்மையில் கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் நடைபெற்றன.

பேச்சுப்போட்டியில் கொடிகாமம் ப. நோ. கூ. சங்கம் முதலாம், இரண்டாம் இடங்களையும் சாவகச்சேரி தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கம் மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளன.

குழுப்பாடல் போட்டியில் முறையே சாவகச்சேரி, பளை, கொடிகாமம் ப. நோ. கூ. சங்கங்கள் முதல் மூன்று இடங்களையும் பெற்றன.

நாடகப்போட்டியில் கொடிகாமம் ப. நோ. கூ. சங்கத்திற்காக மேடையேற்றப்பட்ட 'உயர்ந்தவர்கள்' முதலிடத்தைப் பெற்றது. பளை, கைதடி ப. நோ. கூ. சங்கங்கள் இரண்டாம் மூன்றாமிடங்களைப் பெற்றன. (ப-26)

### தமிழீழக் கண்காட்சி

மாவீரர் தினத்தை முன்னிட்டு தமிழீழ ஆய்வு நிறுவனத்தினால் வலிகாமம் வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் பகுதிகளில் 23, 24, 25-ம் திகதிகளில் ஏககாலத்தில் பொருட்காட்சிகள் இடம் பெறவுள்ளன.

இந்தப் பொருட்காட்சியைத் தமிழீழத்தில் வாழும் யாவரும் கண்டுகளித்தும் பொருளாதார விருத்திக்கு உழைக்கவேண்டியதும் அவர்களின் கடமையாகும் என இது தொடர்பாகத் தமிழீழ ஆய்வு நிறுவனம் பத்திரிகைகளுக்கு விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### முல்லை. விடமைப்பு ஊழியர்கள் சந்திப்பு

மாங்குளம் கண்டி வீதியில் அமைந்துள்ள தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் முல்லை மாவட்டக் காரியாலயத்தை துணுக்காய் அல்லது மாந்தைகிழக்கு உதவி அரச அதிபர் பிரிவில் இயக்குவதற்கு கொழும்பில் இருந்து அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதுசம்பந்தமாக ஆராய்வதற்கு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் முல்லை. மாவட்ட ஊழியர்களை 21-ம் திகதி காலை 9. 30 மணிக்கு கொக்குவிலில் உள்ள தனது வீட்டில் சந்திக்குமாறு மாவட்ட முகாமையாளர் கே. விஜயகுமார் கேட்டுள்ளார்.

### கட்டு நிதி கிடைத்தது

யாழ்-சமூக சேவைப் பகுதியால்மேற்கொள்ளப்படும் பல்வேறு கொடுப்பனவுகளுக்கும் தேவையானகட்டு நிதி 1990 செப்டெம்பர் மாதம் வடக்கு, கிழக்கு மாகாண அரசினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தர்மப்பணக் கொடுப்பனவுகள், உணவு, மண்ணெண்ணெய், சமூகசேவைப் பகுதி ஊழியர்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகள் இக்கட்டுநிதி மூலம் மேற்கொள்ளக்கூடிய வசதிகள் இருந்தும் வங்கிகள் இயங்காமையால் ஏற்பட்டுள்ள காசுத் தட்டுப்பாடுகள் காரணமாக இக்கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. (47)

### பாபநாசம்சிவன் நூற்றாண்டுவிழா

பிரபல கர்நாடக இசை மேதையும், பாடலாசிரியருமான பாபநாசம் சிவனின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்கள் நேற்று முன்தினம் ஆரம்பமாகின. புதுடில்லியில் துணைஜனாதிபதி திரு ஷங்கர் தயாளசர்மா இதனை ஆரம்பித்து வைத்தார். 'மனிதரிடையே சகோதரத்துவத்தைக் கொண்டு வரும் சக்திகளில் இசை பெரும் முக்கியத்துவம் வாய்ந்தது' என்று அவர் தனதுரையில் கூறினார்.

### சந்திரசேகருக்கு தொடர்ந்து வற்புறுத்தல்

"இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண அரசு ஆவன செய்ய வேண்டும்" என்று திரு. தனுஷ்கோடி ஆதித்தன் எம். பி. பிரதமர் திரு. எஸ். சந்திரசேகரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் அண்மையில் புதுடில்லியில் பிரதமரைச் சந்தித்து பல விடயங்கள் பற்றி உரையாடியதாக நேற்றுத் தெரிவிக்கப்பட்டது

இந்திரா காங்கிஸ் எம். பி திரு. இரா. அன்பழகனும் பிரதமரிடம் இக்கோரிக்கையை வலியுறுத்தியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### வட்டு. வீதிகளுக்கு மாவீரர்பெயர்கள்

வட்டுக்கோட்டையில் உள்ள மூன்று வீதிகளுக்கு வீரமரணமடைந்த மூன்று போராளிகளான மரியா, இன்சூர், கபில் ஆகியோரின் பெயர்கள் சூட்டப்படவுள்ளன.

மாவீரர் தின வைபவத்தை முன்னிட்டு 3-7-88-ல் முல்லைத்தீவில் இடம்பெற்ற நேரடி மோதலில் வீரமரணமடைந்த லெப்டினன்ட் மரியா (செல்வி புலேந்திரன் புவனேந்திரசோதி), 26-11-88-ல் காரைநகரில் இடம்பெற்ற சுற்றிவளைப்பில் சயனைற் அருந்தி வீரமரணமடைந்த இன்சூர் (செல்வன் கணநாதன் குணநாதன்), 20-4-89-ல் பனிப்புலத்தில் நடைபெற்ற சுற்றிவளைப்பில் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரமரணமடைந்த கபில் (வேலும் மயிலும் சிவகுமார்) ஆகியோரின் பெயர்களே மழவராயர் வீதி, சிவன் கோவில்வீதி, பெருவளவுவீதி ஆகிய மூன்று வீதிகளுக்கும் முறையே சூட்டப்பட்வுள்ளன.

இதற்கான சகல நடவடிக்கைகளையும் தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் வட்டுக்கோட்டைப் பிரதேசப் பொறுப்பாளர் ரி. ஐயர் மேற்கொண்டுள்ளார். (12)

### டீசலில் கலப்படம் பலர் கைது

பூநகரி பகுதியில் தரம் குன்றந்த, கலப்படம் செய்யப்பட்ட டீசல் விற்ற பல டீசல் வியாபாரிகளை விடுதலைப் புலிகள் கைது செய்துள்ளனர்.

இவர்கள் இக் கலப்பட டீசலை லீற்றர் 100 ரூபாவில் இருந்து 110 ரூபாவரை மலிவாக விற்பனை செய்த போது கைது செய்யப்பட்டனர்.

இப் பகுதியில் இவ் வகையான டீசல் விற்கப்படக் கூடாது எனவும் தரமான டீசல் மட்டும் விற்கப்பட வேண்டும் எனவும் புலிகள் அறிவுறுத்தியுள்ளனர். (ப-32)

# மருத்துவ பீடங்களுக்கு இம்முறை 800 புதிய மாணவருக்கு அனுமதி!

பல்கலைக்கழக மருத்துவ பீடங்களுக்கு இம்முறை அதிகளவான புதிய மாணவர்கள் அனுமதிக்கப்படவுள்ளனர்.

கடந்தவருடங்களில் மருத்துவ பீடங்களுக்கு 575 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டு வந்தனர்.

ஆனால் 1990-91ஆம் புதிய கல்வியாண்டுக்கு 800 மாணவர்களை நாடுமுழுவதுமுள்ள மருத்துவ பீடங்களுக்கு நியமிக்க பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

கொழும்பு மாவட்ட மாணவர்கள் மருத்துவபீடத்திற்கு அனுமதிபெற ஆகக்குறைந்தது 288 புள்ளிகள் பெறல் வேண்டுமென ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

## 3-ம் தர அதிபர் பரீட்சை மீண்டும் நடத்த முயற்சி

மூன்றாம்தர அதிபர் நேர்முகப்பரீட்சையை மீண்டும் நடாத்துவதற்கு முயற்சி எடுக்கப்பட்டு வருகின்றது.

கடந்த ஜூன், ஜூலை மாதங்களில் கொழும்பில் இந்த நேர்முகப்பரீட்சைகள் நடாத்தப்பட்டன. ஆனால் நேர்முகப்பரீட்சை அறிவிப்புக் கடிதங்கள் யாழ் மாவட்ட ஆசிரியர்களுக்கு காலதாமதமாகக் கிடைத்ததினால் அவர்களால் நேர்முகப்பரீட்சைக்குச் செல்லமுடியாதிருந்தது.

நேர்முகப்பரீட்சைக்குச் சமூகமளிக்காத யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த 210 பேரின் பெயர்பட்டியல் யாழ் கல்வித் திணைக்களத்தினால் கல்விச்சேவை ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து நிலைமை சீரானதன் பின்னர் இவர்களுக்கான நேர்முகப் பரீட்சையை நடாத்த ஒழுங்கு செய்யுமாறு யாழ் மாவட்டக் கல்விப் பணிப்பாளர் ஆர். சுந்தரலிங்கம் கேட்டுள்ளார். (74)

### மகாஜனா மாணவர்க்கு....

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியின் க.பொ.த (சா.த) 1990 பரீட்சை எடுக்கவிருக்கும்மாணவர்கள் விண்ணப்பப் படிவத்தில் கையொப்பமிடுவதற்காக நாளை புதன் கிழமை அதிபரின் தற்காலிக இருப்பிடமான சுழிபுரம் பறாளை வீதியில் அமைந்திருக்கும் மாணிக்கவாசகர் இல்லத்துக்கு வருமாறு கோரப்படுகின்றனர்.

### மாவீரர் நினைவாக மன்னாரில் மரம் நாட்டுவிழா

மாவீரர் தினத்தை முன்னிட்டு மன்னார் மாவட்டம் முழுவதும் பயன் தரு மரங்களை நாட்ட விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி நடவடிக்கை எடுத்துள்ளது. 6000 தென்னைகளை நாட்ட கமநல சேவை திணைக்களத்தின் உதவி பெறப்பட்டுள்ளதாக மன்னார் அரசியல் பிரிவு பொறுப்பாளர் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

### அடையாள அட்டை உங்களுடையதா?

கண்டெடுக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்ட தேசியஆளடையாள அட்டைகள் சில முரசொலி ஆசிரிய பீடத்தில் வைக்கப்பட்டுள்ளன.

உரியவர்கள் அலுவலக நேரத்தில், ஆசிரிய பீடத்தில் அடையாளம் காட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.

தற்பொழுது ஆசிரிய பீடத்தில்உள்ளஅடையாளஅட்டைகளின் விபரம் வருமாறு:

பஞ்சலிங்கம் சிவப்பிரகாசம்-பருத்தித்துறை, பீலிப்பையா மாசிலாமணி - வண்ணார்பண்ணை, சுவக்கீன் அன்ரன் யூதாகரன் - கொழும்புத்துறை, சிவக்கொழுந்து சொக்கலிங்கம் - பனிப்புலம், பரமலிங்கம் பாலச்சந்திரன் - வட்டக்கச்சி, குருநாத பிள்ளை குமாரராஜா - இரத்தினபுரி, குமாரசிங்கம் மோகனதாஸ் - சாம்பல்தீவு.

சவரியான் ஆரோக்கியம் லோகு - பேசாலை, புஸ்பவதி கதிரித்தம்பி கெருடாவில், நாகமுத்து - இராசரட்ணம் - தருமபுரம், சுந்தரம் அமிர்தானந்தசிவம் - சாவகச்சேரி வடக்கு, க்ந்தசாமி பாலகிருஷ்ணன் - ஊரியான், மயில்வாகனம் நாகேஸ்வரி - குமரபுரம், மற்றும் இராசதுரை மகேஸ்வரன் - பெருமாள் கோயிலடி, இராசலிங்கம் வடிவழகன் - நாவற்குழி.

தம்பையா பரமேஸ்வரன் - இணுவில் மேற்கு இளையதம்பி ஆனந்தநடராசா-, ஏழாலை மேற்கு. கயிலாயபிள்ளை - ஊர்காவற்றுறை, மற்றும் அரியாலை - குமாரசாமி பரமேஸ்வரன்(ஓய்வூதிய அட்டை),காசிராசா நந்தினி- தம்பலகாமம்.

## குவைத்திலிருந்து திரும்பிய 4200 பேர் இதுவரை பதிவு

குவைத்தில் இருந்து யாழ் திரும்பியோர்இதுவரை 4,200 பேர் தமது பெயர்களை யாழ் செஞ்சிலுவைச் சங்கத்தில் பதிவுசெய்துள்ளனர்.

குவைத்தில் இருந்து தென் பகுதியில் திரும்பியோருக்கு அரசு வழங்கும்அதேஉதவியை இவர்களுக்குப் பெற்றுக் கொடுக்க செஞ்சிலுவைச் சங்கம் முயற்சி எடுத்துள்ளது. அத்துடன் இவர்களுக்கு செம்பிறைச்சங்க உதவியும் வழங்கப்படவுள்ளது.

இதுவரை பதியாதோர்அலுவலகநேரத்தில் தம்மைப்பதிவு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (74)


### சிறு விளம்பரம்

**ஜோதிடம்**

ஜோதிட சாஸ்திரத்தில் முதிர்ந்த அனுபவமிக்க ஜோதிடர் தெல்லிப்பளை ஆயர்பாடி ஸ்ரீமயில் வாகனம் அவர்களை யாழ்ப்பாணம்நாச்சிமார் கோவிலடி, கேசாவில் பிள்ளையார் கோவில் வீதி 52-ம் இலக்கத்தில் சந்திக்கலாம். 11094

### 5-ம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்:

16 - 03 - 1917

மறைவு:

14 - 12 - 1985

திதி: 20-11-1990



**அமரர் கதிரேசு செல்லத்துரை**

(முன்னாள் முகாமையாளர் - குரும்பசிட்டி முத்துமாரி அம்பாள் ஆலயம், ஓய்வு பெற்ற கிராமசேவையாளர், காப்பாளர் - சன்மார்க்கசபை)

உள்ளத்துப் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்

எண்ணிய முடித்தல் வேண்டும்
நல்லனவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்
பண்ணிய பாவமெல்லாம்
பரிதிமுன் பனியே போல
நண்ணிய நின்முன் இங்கு
நசித்திடல் வேண்டும் அன்னாய்
எனப்பேச்சிலும் - மூச்சிலும் ஊன்றி நின்றவர்.

" சன்மார்க்க நெறிநில் "

பிரசாரப்பிரிவு, — சன்மார்க்க சபையினர்
குரும்பசிட்டி,
தெல்லிப்பழை. 11088

வடபகுதி வைத்திய சாலைகளுக்கு

# அதிமுக்கிய மருந்துகள் அனுப்பாது

## அரசு திட்டமிட்ட புறக்கணிப்பு!

உயிருக்கு ஊசலாடும் நிலையில் உள்ள நோயாளர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய அதிமுக்கியமானதும் விலை கூடியதுமான குறிப்பிட்ட ரக மருந்து வகைகள சில கொழும்பிலிருந்து யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்படுவதில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாகச் சத்திர சிகிச்சைக்கு பயன்படுத்தப்படும் முக்கிய மருந்துகள் இங்கு அனுப்பப்படுவதில்லையாம்.

இவை அனுப்பப்படாததற்கான காரணம் எதுவும் உயர்மட்டத்திலிருந்து இங்கு தெரிவிக்கப்படாத போதிலும் பாரபட்சமான ஒருவகை உள்நோக்கு இதன் பின்னணியில் உள்ளது என்பதனை ஊகிக்க முடிகிறது என்றும் சொல்லப்படுகிறது. (70)

## ஆசிரியர் சம்பளக் கட்டுநிதி, வரவில்லை

யாழ் ஆசிரியர்களுக்குரிய இம்மாத சம்பளக் கட்டுநிதி இதுவரை யாழ் கல்வித் திணைக்களத்திற்கு வந்து சேரவில்லை என்று நிதிக்கிளையில் கடமையாற்றும் ஊழியர் ஒருவர் தெரிவித்தார்.

மேலும் கோட்டங்களில் இம்மாதத்துக்குரிய சம்பள வேலைகள் நடைபெறுவதாகவும் வேலணை, யாழ்ப்பாணக் கோட்ட வேலைகள் இதுவரை முடிந்து காசோலை எழுதும் வேலைகள் ஆரம்பிக்கப்பட உள்ளதாக்வும் அறியப்படுகிறது.

நேற்று முன்தினம் வேலணைக் கோட்டத்தைச் சேர்ந்த 12 பாடசாலைகளின் இம்மாதச் சம்பளம் சுமார் 5 லட்சம் பணமாக வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

மிகுதி இக்கோட்டத்தைச் சேர்ந்த 60 பாடசாலைகளினதும் ஏனைய கோட்டங்களான வடமராட்சி, யாழ்ப்பாணம், பண்டத்தரிப்பு, சாவகச்சேரி, மருதனாமடம் ஆகியவைகளின் இம்மாதச் சம்பளம் காசோலையாக வழங்கப்படும். இதற்கு சுமார் 27 லட்சம் இன்னமும் தேவைப்படுகிறது. ப-17

## சிறுவள்ளம் மீது பீரங்கித்தாக்குதல்

கடந்த சில நாட்களாகப் புங்குடுதீவு, நயினாதீவு, நெடுந்தீவு, அனலைதீவு ஆகிய கடற்பிராந்தியங்களில் கடற்படையினரின் கூட்டு ரோந்துகள் அதிகரித்துள்ளன.

இதனால் அப்பகுதி மக்கள் பெரும் கலக்கம் அடைந்து வருகின்றார்கள்.

நேற்று முன்தினம் முற்பகல் பத்து மணியளவில் புங்குடுதீவு, இறுப்பிட்டி, கழுதைப்பிட்டி பகுதிக் கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களை நோக்கி காரைநகர் கடற்படைத் தளத்திலிருந்து வந்த பீரங்கிப் படகொன்று வேட்டுக்களைத் தீர்த்தது. சிறுவள்ளம் ஒன்றில் பயணம் செய்த மீனவர்கள் நால்வரும் கடலில் பாய்ந்து புங்குடுதீவுக் கரையை அடைந்துள்ளனர். (20)

## 60 வயது மனைவி கணவன் மீது வழக்கு

60 வயது மனைவி 65 வயதுக் கணவனிடம் ஜீவனாம்சம் கோரி மந்துவில் பிரதேச சிற்றூர் இணக்கமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

இவ்வழக்கை விசாரித்த இணக்கமன்று சேர்ந்துவாழ வேண்டும் அல்லது தாபரிப்புப் பணம் கட்ட வேண்டும் என்று கூறி முடிவெடுப்பதற்காக மார்கழி மாதம் 9-ம் திகதி வரை கால அவகாசம் கொடுத்துத் தீர்ப்பை ஒத்தி வைத்துள்ளது. (ப-5)

35 ஆயிரம் ஏக்கர்

## வயல்நிலம் முல்லைத்தீவு மாவட்டத்தில் தரிசாகியது

முல்லைத்தீவு மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கையாலும் எரிபொருள், யூரியா தடையாலும் 35 ஆயிரத்துக்கு மேற்பட்ட ஏக்கர் வயல் நிலங்கள் தரிசு நிலங்களாகக் காணப்படுகின்றன.

இராணுவத்தினரின் அடாவடித்தனத்தால் தமிழ் மக்கள் தமது சொந்த நிலங்களில் பயிர் செய்ய முடியாமலும், சொந்த இருப்பிடங்களில் தங்கியிருக்க முடியாமலும் சுயதொழிலை செய்ய முடியாமல் நிர்க்கதியாகி அகதி முகாம்களில் தங்கியுள்ளனர். போதிய உணவு, உறைவிடம், உடை, மருந்து வகைகள் இல்லாமல் தமது சொந்த இருப்பிடங்களுக்குத் திரும்பும்நாளை எதிர் பார்த்து பல மாதங்களாக அகதிமுகாமில் இவர்கள் அடைபட்டு முடங்கிக் கிடக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (38)

## அண்ணன் கத்திவீச்சில் தம்பிகள் படுகாயம்

அண்ணன் தம்பிகளுக்கிடையில் ஏற்பட்ட பகைமை கத்தி வெட்டில் முடிந்துள்ளது

இந்த இருவரில் ஒருவர் யாழ் அரசினர் வைத்தியசாலையிலும் ஒருவர் பூநகரி அரசினர் வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

மேற்படி சம்பவம் பூநகரி மட்டுவில்நாட்டில் நிகழ்ந்துள்ளது.

மூத்தவரான இராசதுரை என்பவர் இளையவர்களான துரைராசா, துரைசிங்கம் ஆகிய இருவருக்கும் பாளைக் கத்தியால் வெட்டியதாகவும் ஆபத்தான நிலையில் முதலில் பூநகரியில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ்ப்பாணம் அனுப்பிவைக்கப்பட்டதாகவும் அறியப்படுகிறது.

இராசதுரை மண்டை உடைந்த நிலையில் பூநகரி அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். (ப-32)

## ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் தமிழ் படும்பாடு

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தனது செய்தியறிக்கைகளில் இப்போதெல்லாம் புதிய, புதிய தமிழ் (?) சொற்களைப் பாவித்து வருகிறது. நேற்றுக் காலை வாசிக்கப்பட்ட தமிழ்ச் செய்தியறிக்கையில் ஜே. வி. பி யின் நாசகாரச் செயல்களாலும் வடக்கு, கிழக்கு அசம்பாவிதங்களாலும் அரசாங்கத்துக்கு "தொள்ளாயிரத்து ஐந்நூறு கோடி ரூபா மேலதிகச் செலவு பட்டது". என்று அறிவிப்பாளர் வாசித்தார். இக்கண்றாவி மாத்திரமல்ல பல தடவைகளிலும் இதே போன்று உச்சரிப்பு இலக்கணக் கருத்துப் பிழைகள் இங்கு ஏற்படுவது வாடிக்கையான சமாச்சாரமாகி விட்டது.

## குடும்பநல சேவையாளர் பரீட்சை முடிவுகள் வெளியாகின

யாழ் தாதியர் பாடசாலையில் கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற குடும்பநல சேவைப் பயிற்சியாளர்க்கான பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன.

இப்பரீட்சையில் 47 குடும்ப நல சேவைப் பயிற்சி பெற்றவர்கள் தோற்றியிருந்தனர். இவர்களில் 30 பேர் சித்தியடைந்துள்ளனர். சித்தியடையத்தவறிய மிகுதி 17 பேருக்கும் மீண்டும் பிரத்தியேகப் பரீட்சை நடாத்தப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பரீட்சை முடிவுகள் யாழ் தாதியர் பாடசாலையில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. (71)

பேராசிரியர் அன்பழகன் யோசனை

## சித்த மருத்துவ ஓலைச்சுவடி நூலுருப் பெற வேண்டும்

"தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் சித்த மருத்துவம் தொடர்பாக ஓலைச் சுவடிகளில் உள்ள செய்திகளை அச்சிட்டு புத்தகமாக வெளியிட வேண்டும்" என்று தமிழகக் கல்வியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் யோசனை கூறியுள்ளார்.

டாக்டர் எம். ஜி. ஆர். மருத்துவப் பல்கலைக்கழகமும் ஹோமியோபதி மற்றும் இந்திய மருத்துவத் துறையும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த கூட்டமொன்றுக்குத் தலைமை வகித்துப் பேசிய அவர் வருடந்தோறும் சுமார் 50 ஓலைச் சுவடிகளையாவது நூலாக்க வேண்டும் என்றார்.

முரசொலிக்கு வந்த கடிதம்

## கல்வி - ஒரு போராளியின் பார்வை

ஆசிரியர்,
முரசொலி.

இன்றைய போர்ச் சூழலிலும் தமிழீழ மண்ணிற்கே தங்களது உழைப்பு என்ற உயரிய நாட்டுப் பற்றுடன் தமிழ்ச் சமூகத்துக்குச் சேவை செய்து கொண்டிருக்கும் மிகக்குறைந்த கல்விமான்களுள் ஒருவராகிய யாழ் பல்கலைக்கழகத் துணை வேந்தர் திரு. துரைராஜாவுடன் நீங்கள் கண்ட செவ்வி ஆரோக்கியமான பல கருத்துக்களை வாசகர்களுக்கு கொடுத்துள்ளது.

★ எமது கல்வி அமைப்பு எமது மண்ணுக்கும் மக்களுக்கும் சேவை செய்யவில்லை என்பதையும்,

★ அந்தக்கல்வி அமைப்பு உருவாக்கித் தந்த அறிவுஜீவிகள் எமது மக்களுக்கு சேவை செய்யாது சுயநலத்துடன் அந்நிய நாடுகளுக்கு ஓடிவிடுகின்றனர் என்பதையும்,

★ எமது கல்வி அமைப்பு எமது மாணவர்களுக்கு நாட்டுப்பற்றை தொண்டுள்ளத்தை ஏற்படுத்தவில்லை என்பதையும் அந்தச் செவ்வி வாசகர்களுக்கு நன்றாகவே உணர்த்தியுள்ளது.

அதிக பிரயோசனத்தைக் கொடுத்த அந்தச் செவ்வி மூலம் கணிசமான மக்கள் விடைதேடத் துடிக்கும் இரண்டு வினாக்களுக்கு தெளிவான விடையை வாசகர்களுக்குக்கொடுத்திருக்கலாம் என நான் அபிப்பிராயப்படுகின்றேன் :

I. தமிழீழ விடுதலைப் போராட்டம் தமிழ்மாணவர்களது கல்வியைச் சீரழித்து விட்டதா?

II. பாடசாலைக்கல்வியை இடையில் நிறுத்திவிட்டு போராட்டத்திற்கு வரும் மாணவன் தனது கல்வியை இழக்கின்றானா?

என்பவைதான் அக்கேள்விகள் ஆகும்.

துணைவேந்தர் குறிப்பிட்டதைப் போன்றே எமது கல்வி அமைப்பில் ஒரு கோளாறு உண்டு. அக்கோளாறானது எமது கல்வி அமைப்பின் அடித்தளத்திலேயே உண்டு இன்று எமது மாணவர்கள் பெறும் கல்வி அமைப்பை அந்நிய ஆட்சியாளர்களே கொடுத்திருக்கின்றார்கள். அனைத்தையும் போலவே அந்தக் கல்வி அமைப்பின் இறுதி வெளிப்பாடும் அந்நிய ஆட்சியாளர்களுக்குச் சாதகமானதாக இருக்கும் வண்ணமே வடிவமைக்கப்பட்டதே அல்லாமல், எமது மண்ணுக்கும் மக்களுக்கும் உதவுவதற்காக வடிவமைக்கப்படவில்லை. அதனால்தான் அக்கல்வி அமைப்புத் தந்த அறிவும் அந்த அறிவு ஊட்டி வளர்த்த மனோபாவங்களும் சிந்தனை முறைகளும் எமது மக்களின் சுய அறிவை சுதந்திர உணர்வை மயக்கி அவர்களை அடிமை மனோபாவத்துக்குள் வாழப் பழக்கியது.

இந்த மனோபாவத்தில் ஊறியதன் விளைவுகளில் ஒன்றுதான் விடுதலைப் போராட்டம் கல்வியைச் சீரழித்துவிட்டது என்ற கண்டனக்குரல் ஆகும்.

இதன் உச்ச வெளிப்பாடுதான் கல்விமான்களில் பெரும்பாலானோர் எமது மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு உதவாமலும் சிலவேளைகளில் விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான கருத்துக்களை விதைப்பதிலும் பிரசாரம் செய்வதிலும் முன்னிபபதுமாகும்.

உண்மையில் விடுதலைப் போராட்டம் எமது அறிவை வளர்த்துள்ளது. சிந்திக்கும் ஆற்றலை விருத்தி செய்துள்ளது. உலகைப் பற்றியதும் சமூகங்களைப் பற்றியதுமான உண்மை நடைமுறையைப் புரிந்து கொள்ளும் வண்ணம் எமது அறிவு விசாலமாகியுள்ளது. இது ஒருபுறமிருக்க எந்தவொரு விடுதலைப் போரின் உச்சக்கட்டத்திலும் அந்த மக்களின் சாதாரண வாழ்க்கை முறைகள் நெருக்கடிகளைச் சந்தித்து சில மாறுதல்களை ஏற்படுத்திக்கொண்டு இசைவாக்கம் பெற்று வாழ முடல்வது இயல்பு.

எமது விடுதலைப் போராட்டத்திலும் அது நடைபெற்று வருகின்றது:-

★ எமது வழமையான உணவிலும் அதைச் சேகரிக்கும் உட்கொள்ளும் விதங்களிலும் மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன.

★ எமது வீடுகளில் நாம் அன்றாடம் வாழ்ந்த வாழ்க்கை முறைகளுள் மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன.

★ எமது பாரம்பரிய சம்பிரதாய சடங்குகள் நிறைவேற்றும் தன்மைகளில் மக்கள் மாறுதல்களை ஏற்படுத்தியுள்ளனர்.

அதாவது இந்தப்போர் நெருக்கடியின் மத்தியிலும் தமது அவசிய தேவைகளை, அவர்களின் நம்பிக்கைகளை பாதுகாப்பதில் புதிய அணுகு முறைகளைக் கைக்கொண்டு வந்திருக்கிறார்கள்.

இதே போலவே, பாடசாலைக் கல்வியும் இந்தப் போரால் நெருக்கடிக்குள்ளானது. முன்னைய விடயங்களில் மாறுதல்களை அறிமுகப்படுத்தியதைப்போல பாடசாலைக் கல்வியைப் பெறுவதில் எந்த மாறுதல்களும் அறிமுகமாகவில்லை.

தங்களது தனிப்பட்ட வாழ்க்கை முறைகளுக்கு ஒரு நெருக்கடி தோன்றியபோது அந்த வாழ்க்கை முறையை சரி செய்துகொள்ளத் தங்களைத் தாங்களே மாற்றி புதிய நடைமுறைகளைப் புகுத்தி வாழ முற்பட்டதைப்போன்று பாடசாலைக் கல்விக்கு ஒரு நெருக்கடி ஏற்பட்டபோது அந்த நெருக்கடியை வென்று புதிய உபாயங்கள் மூலம் தொடர்ந்தும் அந்தக் கல்வியை வழங்க கல்வித்துறையைச் சேர்ந்தவர்கள் எந்த முயற்சியையும் எடுத்ததாகத் தெரியவில்லை.

எமது கல்வி அமைப்பு உருவாக்கிய மனோபாவம்தான் அதற்குக் காரணம்

தனிப்பட்ட தேவைகளை எப்பாடுபட்டும் நிறைவேற்ற முற்படும் மனோபாவத்தைதான் இந்தக்கல்வி அமைப்பு உருவாக்கி வளர்த்ததே அல்லாமல், நெருக்கடி நிலைக்குள்ளும் பொதுத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக ஒன்று திரளும் மனோ நிலையை அது ஏற்படுத்தவில்லை.

இத்தகைய மனோநிலைக்குள் எமது மக்களை வைத்திருப்பதுதான் இக்கல்வி அமைப்பை உருவாக்கியவர்களின் நோக்கமாகவும் இருந்தது.

— 04 ஆம் பக்கம் பார்க்க

# நாளை முதல் மாவீரர் தினம் அனுஷ்டிக்க ஏற்பாடுகள்

நவம்பர் 27-ம் திகதி தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டு, நாளையிலிருந்து ஒருவாரம் மாவீரர் வாரமாக அனுஷ்டிக்கப்படும்.

நாளை காலை 9 மணியளவில் அனைத்துப்பொதுஸ்தாபனங்களிலும், கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் சனசமூக நிலையங்கள் ஆகியவற்றில் தமிழீழத் தேசியக் கொடி ஏற்றப்படும்.

கொடி ஏற்றத்துடன் வீரமரணமடைந்த போராளிகளின் உருவப்படங்கள் திரை நீக்கம் செய்யப்பட்டு அந்தந்தப் பிரதேச மக்களால் அஞ்சலி செலுத்தப்படும்.

சகல வீதிகளும் சுத்தம் செய்யப்பட்டு மர நாட்டு வைபவமும் இடம் பெறும். அத்துடன் சில வீதிகளிற்கு வீரமரணம் அடைந்த போராளிகளின் பெயரும் சூட்டப்படும்.

பல்வேறு இடங்களில் கண்காட்சிகளுக்கும், இரத்த தானம் வழங்குவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. யாழ் பல்கலைக்கழகத்தில் விசேட விதமாகத் தயாரிக்கப்பட்டுள்ள புகைப்படக் கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

பல இடங்களில் பேச்சுப் போட்டி, வினாவிடை மற்றும் மாணவர் கல்வி தொடர்பான போட்டிகளும் இடம்பெறுகின்றன.

## மாவீரர் நாளை முன்னிட்டு தேசியக் கொடி ஏற்றுதல்

இன்று காலை ஆரம்பமாகும் மாவீரர் வாரத்தை முன்னிட்டு காலை 9 00 மணிக்கு பின் வரும் இடங்களில் தேசியக் கொடி ஏற்றும் வைபவம் இடம் பெறும். விடுதலைப்புலிகளின் அனைத்து முகாம்கள், பாசறைகள், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் அனைத்துச் செயலகங்கள், பாடசாலைகள், திணைக்களங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், தொண்டர் ஸ்தாபனங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள், தொழிற்சாலைகள், ஏனைய கேந்திர முக்கியத்துவம் வாய்ந்தஇடங்கள் என்பனவாகும்.

தேசியக் கொடியானது தகைமை வாய்தவர்களினாலேயே ஏற்றி வைக்கப்பட வேண்டும். நாளை காலை 9.00 மணிக்கு ஏற்றப்படும் கொடி மாவீரர் நாளான 27.11.90.இரவு7 00மணிச்கு இறக்கப்படும்.கொடிக் கம்பங்கள் ஒரே சீராக 20 அடி உயரத்தைக் கொண்டதாகவும் இருத்தல் வேண்டும். அத்துடன் தேசியக்கொடி ஏற்றப்படும் இடங்கள் புனிதப் பிரதேசமாகப் பேணப்படுதல் வேண்டும்.(20,39,70,ப10,71

# மந்திகையில் இரவு நேரம் இரு கடைகளில் கொள்ளை

மந்திகையிலுள்ள இரு கடைகள் கடந்த சனி இரவு இனந்தெரியாதோரால் உடைக்கப்பட்டு பல்வேறு பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

மந்திகை, பருத்தித்துறை வீதிச் சந்தியிலுள்ள கே.ஜெயராசா என்பவரின் கடைக் உடைக்கப்பட்டு நூறு லீற்றர் மண்ணெண்ணெய், ஒன்றரைஅந்தர் அமோனியப் உட்பட சோப்வகைகள் தீப்பெட்டி என்பனவும், மந்திகை ஆஸ்பத்திரிக்கு முன்பாக உள்ள வி. நடராசா என்பவரின் தேநீர்க் கடையின் பின்பக்கக்கதவும் உடைக்கப்பட்டு அங்கு ஆயிரம் ரூபாய் ரொக்கப் பணமும், சோப் வகைகள் நுளம்புத்திரி, ஓடிக் கலோன் என்பனவும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

## யாழ் போதனா வைத்தியசாலை

# சமுகமளிக்காத ஊழியர் தண்டனைக்கு உள்ளாவர்

யாழ் போதனா வைத்தியசாலையில் கடமைக்கு இன்னமும் சமுகமளிக்காத ஊழியர் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இங்கு ஐம்பது வீத ஊழியர்கள் மாத்திரமே சமுகமளிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

900 ஊழியர்கள் இங்கு ஊழியர்களாக உள்ளனர் என்றும் சமுமளிக்காத ஊழியர்க்குச் சம்பளமற்ற லீவாக நடவடிக்கை அமையும் என்றும் தொடர்ந்தும் அவர்கள் சமுகமளிக்காத விடத்து அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (74)

## வீரமரணம்

மன்னார் மாவட்டத்தில் உள்ள மன்னார்த்தீவுப் பகுதியில் இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலில், ஸ்ரனி வீரமரணமடைந்தார், இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர் (71)

## தனிப்பட்ட...

பட்ட பரீட்சார்த்திகளின் சொந்த விலாசத்துக்கு தபாலில் அனுப்பிவைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. சுமார் 5000 தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் முடிவுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகத் தெரியவருகிறது.(ப17,74,32

## கிழக்கு...

டம் பொதுமக்கள் உதவியாக புதிய பாத்திரங்களாகவோ, பணமாகவோ புதிய ஆடைகளாகவோ கொடுத்து கிழக்கு சகோதரர்களுக்கு உதவுமாறு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி கேட்டுள்ளது. (71)

## கல்வி ஒரு போராளியின் பார்வை...

நெருக்கடியான இன்றைய நிலையில் தடைப்பட்டிருக்கும் பாடசாலைக் கல்வியை ஏதாவது ஒரு வழிமூலம் முன்னெடுப்பதற்கு எந்த முயற்சியையும் மேற்கொள்ளாது உன்னதமான எமது விடுதலைப் போராட்டத்தின்மீது பழி சுமத்துவதிலேயே பலர் குறியாயுள்ளனர்.

விடுதலைப் போராட்டம் முனைப்புப் பெற்ற காலங்களில் இருந்து எமது இயக்கமானது பாடசாலைக் கல்வியில் தலையிடாத கொள்கையைத்தான் கடைப்பிடித்து வந்தது. அத்துடன் போர் கூர்மைஅடைந்ததும் ஏற்பட்ட விளைவுகளினால் ஆரம்ப நடுத்தரக் கல்வியைத் தொடர முடியாத மாணவர்களின் வசதிக்காக குறிப்பாக வன்னிப் பகுதியில் தற்காலிகப் பாடசாலைகளை அமைத்தும் அதற்கு தேவையான பிரத்தியேக தொண்டர் ஆசிரியர்களை ஊதியம் கொடுத்து நியமித்தும் கல்விக்கு ஊக்கம் கொடுத்து வந்துள்ளது.

துணைவேந்தர் குறிப்பிட்டதைப் போன்றே படிப்பை இடையில் நிறுத்தி போராட்டத்திற்கு— அரசியலுக்கு மாணவர்கள் வருவது இயல்புதான். அவர்கள் உத்தியோகத்தை இலக்காகக் கொண்ட தங்களது உயர் கல்வியைத் துறந்து காலத்தின் அவசியம் கருதி போராட்டப் பாதையை விரும்பித் தேர்ந்தெடுத்துக் கொள்கிறார்கள். இத்தகையவர்கள் தாங்கள் கல்வி வாய்ப்பை இழந்து விட்டதாக ஒரு போதும் உணர்வதில்லை.

இந்த நிலையில் படிப்பை இடையில் நிறுத்திய போராளி ஒருவன் கல்வியை இழந்து விட்டான் எனப் பலர் கருதுவதற்குக் காரணம் கல்வியை ஒரு பொருளாதார சாதனமாக மட்டும் பார்ப்பதினால்தான். அப்பொருளாதாரத்தை அடைவதில் அவன் தவறிவிட்டான்; இதனால் அவனது எதிர்காலம் இருள் மயமாகிவிட்டது என்ற ஆதங்கத்தால் எழுந்த உணர்வுகளின் பிரதிபலிப்புத்தான் கல்வியை இழந்து விட்டான் என்ற கருத்தாகும்.

உண்மையில் அப்போராளி பொருளாதார வாய்ப்பை இலக்காகக் கொண்ட உயர் கல்வியையே துறந்திருக்கின்றானே அல்லாமல் அவன் கல்வி பெறுவதை இழக்கவில்லை. போராட்டம் அவனுக்கு தொழிற்கல்வியை அளிக்கின்றது. சமூகக் கல்வியைக் கொடுக்கின்றது. விஞ்ஞானப் பார்வையை வழங்குகின்றது சமூக உணர்வை ஊட்டுகின்றது. நாட்டுப் பற்றை இனப்பற்றை வளர்க்கின்றது.

இதேவேளை இங்கு நாங்கள் கல்வி தொடர்பான ஒரு விமர்சனத்தை வைக்கும் போது கிழக்கு மாகாணத்தில் தமிழ் மாணவர்கள் உயிர் வாழ்வதற்காகப் பிரயத்தனப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இது எமது விடுதலைப் போராட்டம் சந்திக்கும் இரு வேறுபட்ட நிலைகளாகும்.

எமது எதிர்காலத்தை நிர்ணயிக்க நடந்துகொண்டிருக்கும் இந்த விடுதலைப் போராட்டத்திற்கு ஒத்தாசையாக இருக்கக்கூடிய விதத்தில் எமது கற்கைநெறி அமைய வேண்டும்; இக்கல்வி அமைப்பை உருவாக்கும் பணியில் எமது கல்விமான்கள் முனைந்து செயற்பட வேண்டும் என்பதே எமது வேணவா.

திருநெல்வேலி. மைக்கல்

# புதிய மாணவர்களை இம்சைப்படுத்தினால் கடும் நடவடிக்கை என்கிறார் துணைவேந்தர்

யாழ் பல்கலைக் கழகத்தில் ராக்கிங் செய்யும் மாணவர்களைத் தடுக்க முற்படும் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் மீது நையாண்டி பண்ணுமளவுக்கு சில மாணவர்கள் நடந்து கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிரேஷ்டமாணவஆலோசகர் அலுவலகம் இதனைக் கண்டித்து மாணவர்களுக்கான அறிவுறுத்தல் எனும் தலைப்பில் ஒரு அறிக்கையை விடுத்துள்ளது.

இவ் அறிக்கையில் மாணவர்களின் இவ்வாறான நடவடிக்கைகள் நமது பல்கலைக் கழகத்தின் கௌரவத்திற்கும் அதன் தொடர்ச்சியான இயக்கத்திற்கும் ஏற்றதல்ல என்றும் எனவே சிரேஷ்ட மாணவர்கள் தமது பொறுப்பை உணர்ந்து நடந்து கொள்ளுமாறும்தெரிவிக்கப்பட்டுள்ளது

இதேவேளைதுணைவேந்தர் அ, துரைராஜா விடுத்த அறிக்கையில் தற்போதைய சூழ் நிலையில் பல்கலைக்கழகம் இயங்குவது பெருமைபட வேண்டிய விடயம் எனவும் இச்சமயத்தில் ஒரு சில சிரேஷ்ட மாணவர்களின் நடவடிக்கை மிகுந்த வேதனையைத் தருவதாகவும் குறிப்பிட்டார்.

இந்நிலை தொடருமானால் சம்பந்தப்பட்ட மாணவர்கள் உடனடியாக பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேற்றப்படுவார்கள் எனவும் துணைவேந்தர் தெரிவித்துள்ளார். (70)

## நேற்று...

டுறவுச் சங்கக்கட்டிடப் பொருட்கள் விற்பனை நிலையத்தின் மீது விழுந்து வெடித்ததில், அக்கடை உள்ள வீடு முற்றாகச் சேதமடைந்தது.

35வயது மதிக்கத்தக்க பெண்மணி ஒருவர் அவ்விடத்திலேயே பலியானார்.

எஸ் ஸ்ரீதரன் (25) என்பவரும்காயமடைந்து மந்திகை அரசினர்வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக்காலை 9.30 மணி முதல் 10.15 மணிவரை குப்பிளான், புன்னாலைக்கட்டுவன் பகுதியில் நான்கு பொம்மர் விமானங்கள் பலத்த குண்டு வீச்சுத்தாக்குதலை மேற்கொண்டன.

இத்தாக்குதலில் குப்பிளான் வடக்குபுன்னாலைக்கட்டுவன், புன்னாலைக்கட்டுவன் தபால் நிலைய அருகாமையிலுள்ள பல வீடுகள் பலத்த சேதமடைந்தன.

கட்டுவன் பகுதியிலும் நேற்றுக்காலை 7மணியளவில் பொம்மர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டன. இத்தாக்குதலின் சேத விபரம் எதுவும் தெரியவரவில்லை.

நேற்றுக்காலை 10 மணியளவில் சேந்தான்குளம் பகுதியை வட்டமிட்ட இருபொம்மர் விமானங்கள் மூன்று குண்டுகளை வீசின.

இவற்றிலொன்று வெடிக்கவில்லை. இரண்டாவது சேந்தான்குளம் சந்தியிலுள்ள குமாரதேவன் என்பவரின் வீட்டின் மீது விழுந்தது. இதனால் இவரது வீடு பலத்த சேதமடைந்தது.

மற்றைய குண்டு கடற்கரைப்பகுதியில் விழுந்தது. (39, 50, ப33, 48)

## தச்சன்காட்டில்...

தங்களின் விபரம் வருமாறு; ஆர். பி. ஜி. 01, ரி. 56-1-01, ஏ. கே. எல். எம்,ஜி.-01 ரி-56-01, ஏ. கே. மகஜீன் - 06, ஏ. கே. எல். எம். ஜி. எம். மகஜீன் 08, ஜி. பி. எம். பெரல் - 01, ஆர். பி. ஜி. ஷெல் 21, ஆர். பி ஜி. பிறப்ளர்-20, ஜே. ஆர்.கிரனைட் - 07, ஜ. எம் ரவை 265 ஐ. எம், ரவை - 4385, நேட்டோ ரவை - 1149, கோல்சர் - 01, இராணுவ பாதுகாப்பு ஜக்கற் - 3, இராணுவச் சப்பாத்து - 10 சோடி பயனைட் கத்தி - 01, கவர்க் கண்ணாடி - 01, தண்ணீர் கான் - 01. துப்பரவு செய்யும் பிறஷ் - 01, தோல்பை - 05, தலைக்கவசம்-02, தண்ணீர்க் கான் கோல்சர் - 12, இராணுவத்தொப்பி - 05, இராணுவ பெல்ட் - 07, இராணுவ ஆவணங்கள் அடங்கிய சூட்கேஸ்.

மோதல்களின் போது தச்சன்காடு நோக்கி வரமுயன்ற மாவிட்டபுரம், காங்கேசன் துறை ராணுவத்தினர் மீதும் தாக்குதல் நடாத்தப்பட்டது.

# செங்கலடியில் பொதுமகன் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள தலவாய இராணுவ முகாமில் இருந்து செங்கலடிக்குச் சென்ற இராணுவத்தினர் செங்கலடியில் வைத்து ஒருவரைச் சுட்டுக் கொன்றுள்ளனர்,

கடந்த 11ந் திகதி ஞாயிறு இடம் பெற்ற இச்சம்பவத்தில் சுட்டுக் கொல்லப்பட்டவர் தலவாயச் சேர்ந்த சி செல்லையா (68) என்று அறிவிக்கப்பட்டுள்ளது, (71)

# இரு கன்றுகளை ஈன்ற பசு

வடமராட்சியில் சாரையடி என்னுமிடத்தில் திருமதி வரதராசா சின்னப்பிள்ளை என்பவரது வீட்டில் உள்ள பசுமாடு ஒன்று மிகவும் அபூர்வமாக இரு பசுக்கன்றுகளை ஈன்றுள்ளது.பதினைந்து நாட்களுக்கு மேலாகியும் தாயும் கன்றுகளும் சுகமாக உள்ளன, (39)

## சத்திரசிகிச்சை..

இறப்புகள் யாழ் போதனா வைத்தியசாலையில் நிகழ்கின்றன என ஆஸ்பத்திரி வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன. (ப-11)

# காலமானார்

## செல்வி தனேஸ்வரி சண்முகநாதன்

பலாலி ஆசிரியர் கலாசாலை கணிதப் பிரிவைச் சேர்ந்தவரும், மன்னாரைப் பிறப்பிடமாகக் கொண்டவருமான செல்வி. தனேஸ்வரி சண்முகநாதன் அவர்கள் 19-11-90 அன்று அகால மரணமானார், இவர் முன்னாள் மன்னார் உதவி அரசாங்க அதிபரின் அருமை மகளாவார். தகனக் கிரியை 20-11-90 காலை 9-30 மணியளவில் காரைநகரில் நடைபெறும்.

தகவல்: பலாலி பயிற்சி ஆசிரியர் ஒன்றியம்

1100

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ். கல்வியங்காடு டக்சுவீதி 'லக்ஷ்மிபில்டிங்' இல் உள்ள அச்சகத்தில் 20.11-90 இல் அசசிட்டு வெளியிடப் பெற்றது.